RNI-NO: TNTAM/2021/83936
Postel Regd. No: TN/5/SVA/2023-2025

9842961596, 9384761596
ஹோட்டல் ஸ்ரீ பழனிஸ் சைவம்
HOTEL SREE PALANIS Veg
உணவு ஆர்டர் தேவைக்கு : 80980 97273
மேல்கரை மெயின் ரோடு - மானாமதுரை

# மாலை தந்தி
MALAI THANTHI

தமிழால் வெல்வோம்

DAILY EVENING www.malaithanthi.in மாலை நாளிதழ்

கார்த்திக் மருத்துவமனை
மனோ CT ஸ்கேன்
24 மணி நேர சேவை
சிவகங்கை
No 28 மதுரை ரோடு - சிவகங்கை 630 561

சிவகங்கை மலர்-5 இதழ்- 16 ஜனவரி.22 2026 வியாழக்கிழமை malaithanthi2020@gmail.com 4 பக்கங்கள் விலை ரூ.5

# இந்தியாவிலேயே எந்த மாநிலத்திலும் செய்யாத சாதனை; முதல்வர் ஸ்டாலின் பெருமிதம்

சென்னை : ஜன.22-

தமிழகத்தில் உள்ள பதிமூன்று ஆயிரத்திற்கும் மேற்பட்ட உள்ளாட்சி அமைப்புகளில் மாற்றுத்திறனாளி பிரதிநிதிகள் இடம்பெற இட ஒதுக்கீடு சட்டம் நிறைவேற்றி , இந்தியாவிலேயே எந்த மாநிலத்திலும் செய்யாத சாதனையை நம்முடைய ஆட்சி செய்து இருக்கிறது என முதல்வர் ஸ்டாலின் தெரிவித்தார்

சென்னை தி . நகரில் உள்ள லிட்டில் ப்ளவர் கான்வென்ட் நூற்றாண்டு விழாவில் முதல்வர் ஸ்டாலின் பேசியதாவது : சிறுமலர் பள்ளிக்கு நான் வருவது இது முதல்முறையல்ல . ஆயிரத்து தொள்ளாயிரத்து எண்பத்து நான்காம் ஆண்டில் இருந்து தொடர்ந்து நாற்பது ஆண்டு காலமாக இந்த பள்ளிக்கு வந்து தான் என்னுடைய ஒவ்வொரு பிறந்த நாளையும் கொண்டாடி கொண்டு இருக்கிறேன் . எந்தவொரு நிறுவனம் நூறு ஆண்டுகள் நிலைத்து நிற்பது என்பது மிகப்பெரிய சாதனை . அதுவும் மாற்று திறன் உடைய மாணவர்களுக்காக நடத்தக்கூடிய ஒரு கல்வி நிறுவனம் நூறு ஆண்டுகள் காண்பது என்பது பெருமைக்கூடிய சாதனை . அப்படி நூறு ஆண்டு கால சாதனை செய்த லிட்டில் ப்ளவர் பள்ளிக்கு வாழ்த்துக்கள்



. அழைக்கவில்லை என்றாலும் கூட லிட்டில் ப்ளவர் கான்வென்ட் பள்ளியின் நிகழ்ச்சியில் பங்கேற்று இருப்பேன் . எம்எல்ஏ ஆனது முதல் முதல்வரானது வரை இந்த பள்ளியின் பல்வேறு நிகழ்ச்சிகளில் பங்கேற்று வருகிறேன் . எனக்கு இந்த பள்ளிக்கும் நீண்ட நெடிய ஆழமான உறவு இருக்கிறது . இப்பொழுது சட்டசபை கூட்டத்தொடர் நடக்கும் நேரம் , இருந்தாலும் இந்த பள்ளி விழாவில் கலந்து கொள்ள வேண்டும் என்று வந்து இருக்கிறேன் . ஒருமுறை பிறந்தநாள் கொண்டாட்டத்திற்காக சிறுமலர் சிறப்புப் பள்ளிக்கு வந்தபோது , பினோ ஜெபின் என்ற மாணவி , தான் அமெரிக்காவில் நடைபெறும் இளம் தலைவர் மாநாட்டில் பங்கேற்க உதவ வேண்டும் என கடிதம் வழங்கினார் . அப்போது கருணாநிதி முதல்வராக இருந்த நிலையில் , இதனை எடுத்துச் சொல்லி சிறப்பு நிதியை விடுவித்தோம் . அவரது பிறந்தநாள் அன்று அவரின் வீட்டிற்கு நேரில் சென்று சர்ப்ரைஸ் கொடுத்தோம் . அந்த பினோ ஜெபின்தான் இந்தியாவிலேயே முதல்முறையாக ஐ . ஏ எஸ் . தேர்வில் தேர்ச்சி பெற்ற பார்வையற்ற மாற்றுத்திறனாளி ஆவர் . என் மனைவி எழுதிய ' அவரும் நானும்' புத்தகத்திலும் இதை நெகிழ்வோடு எழுதியுள்ளார்

நமது அரசு தரக்கூடிய ஆதரவால் பாரா ஒலிம்பிக் உட்பட பல விளையாட்டு போட்டிகளில் தமிழகத்தை சேர்ந்த மாற்றுத்திறனாளி வீரர்கள் சாதனை மேல் சாதனை படைத்துக்கொண்டு இருக்கிறார்கள் . மாரியப்பன் , தங்கவேலு , நித்யஸ்ரீ என பல ரோல் மாடல்கள் உருவாகி கொண்டு இருக்கிறார்கள் . தமிழகத்தில் உள்ள பதிமூன்று ஆயிரத்திற்கும் மேற்பட்ட உள்ளாட்சி அமைப்புகளில் மாற்றுத்திறனாளி பிரதிநிதிகள் இடம்பெற இட ஒதுக்கீடு சட்டம் நிறைவேற்றி , இந்தியாவிலேயே எந்த மாநிலத்திலும் செய்யாத சாதனையை நம்முடைய ஆட்சி செய்து இருக்கிறது . தமிழகம் முழுவதும் உள்ள மாற்றுத்திறனாளி மாணவர்களுக்கு ஏதாவது துறையில் சாதனை செய்ய வேண்டும் . இவ்வாறு முதல்வர் ஸ்டாலின் பேசினார் .

## சத்துணவு ஊழியர் கோரிக்கையை நிறைவேற்ற வேண்டும்: தமிழக அரசுக்கு பாஜக வலியுறுத்தல்

சென்னை, ஜன.22-

தமிழக பாஜக செய்தித் தொடர்பாளர் ஏ.என்.எஸ்.பிரசாத் வெளியிட்டுள்ள அறிக்கை: கடந்த ஜனவரி 3ம் தேதி அரசு ஊழியர் சங்கங்களின் போராட்டத்தின் போது, தமிழக அரசு அறிவித்த புதிய அறிவிப்புகளில் சத்துணவு ஊழியர்களின் கோரிக்கைகள் முற்றிலுமாகப் புறக்கணிக்கப்பட்டுள்ளன.




அரசுடன் நடத்திய பேச்சுவார்த்தையும் தோல்வியில் முடிந்ததால், 71 ஆயிரம் சத்துணவு ஊழியர்கள் காலவரையற்ற வேலைநிறுத்தம் மற்றும் மறியல் போராட்டத்தில் ஈடுபடுகின்றனர்.

2021 சட்டப்பேரவைத் தேர்தலின்போது, சத்துணவு ஊழியர்களுக்கு காலமுறை ஊதியம், பணிக்கொடைத் தொகை ரூ.5 லட்சமாக உயர்த்தப்படும். குடும்ப ஓய்வூதியம் மாதம் ரூ.6,750 வழங்கப்படும் என்ற முதல்வர் ஸ்டாலினின் வாக்குறுதிகள் 5 ஆண்டுகள் ஆகியும் நிறைவேற்றப்படவில்லை.

தேர்தல் நேரத்தில் அளித்த வாக்குறுதிகளை முதல்வர் உடனடியாக நிறைவேற்ற வேண்டும். இந்த வேலைநிறுத்தப் போராட்டத்தால் பள்ளி மாணவர்கள் மதிய உணவு கிடைக்காமல் பெரிதும் பாதிக்கப்படும் சூழல் உருவாகியுள்ளதால், தமிழக அரசு இதில் உடனடி கவனம் செலுத்த வேண்டும்.

## பொருளாதார வளர்ச்சியில் முதன்மை மாநிலமாக தமிழகம்: தமிழக அரசின் சாதனை பட்டியல்

சென்னை, ஜன.22-

பொருளாதார வளர்ச்சியில் தமிழகம் முதன்மை மாநிலமாக விளங்குவதாக ஆளுநர் உரையில் தமிழக அரசின் சாதனைகள் பட்டியலிடப்பட்டுள்ளன.

இது தொடர்பாக ஆளுநர் உரையில் கூறப்பட்டிருப்பதாவது: தமிழகம் கடந்த நிதியாண்டில் 11.9 சதவீதம் பொருளாதார வளர்ச்சியை எட்டி, இந்தியாவிலேயே முதன்மை மாநிலமாக உருவெடுத்துள்ளது. இது கடந்த 14 ஆண்டுகளில் இல்லாத சாதனையாகும். பொங்கல் திருநாளையொட்டி 2.23 கோடி குடும்பங்களுக்கு தலா ரூ.3,000 ரொக்கம் உள்ளிட்ட ரூ.6,936 கோடி மதிப்பிலான பரிசுத் தொகுப்புகள் வழங்கப்பட்டுள்ளன.

தடுப்பூசி செலுத்துதல், ஆக்சிஜன் மற்றும் கூடுதல் படுக்கை வசதிகளை உறுதி செய்தல் போன்ற போர்க்கால நடவடிக்கைகளால், தமிழகம் கரோனா பிடியிலிருந்து வெற்றிகரமாக மீட்கப்பட்டது. இந்தச் சாதனை வரலாற்றில் என்றும் நிலைத்திருக்கும். ‘மகளிர் விடியல் பயணம்’ மூலம் பெண்கள் மாதம் ரூ.888 வரை சேமிக்கின்றனர். சுமார் 1.30 கோடி பெண்களுக்கு மாதந்தோறும் ரூ.1,000 உரிமைத் தொகை வழங்க இதுவரை ரூ.33,464 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.

உயர்கல்வியைத் தொடரும் மாணவிகளுக்கு மூவலூர் ராமாமிர்தம் அம்மையார் புதுமைப் பெண் திட்டத்தின் மூலம் மாதந்தோறும் ரூ.1,000 உதவித் தொகை வழங்கப்பட்டு வருகிறது. நகரங்களுக்கு வரும் பெண்கள் நவீன வசதிகளுடன் நியாயமான கட்டணத்தில் பாதுகாப்பான தங்கும் வசதியைப் பெற 19 தோழி விடுதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. இதன் மூலம் இந்தியாவிலேயே தொழிற்சாலைகளில் பணிபுரியும் பெண் ஊழியர்களை அதிகமாகக் கொண்ட (40.3 சதவீதம்) மாநிலமாக தமிழகம் திகழ்கிறது.

கடந்த 5 ஆண்டுகளில், தமிழகத்தில் உள்ள 4.9 லட்சம் ஊரக மற்றும் நகர்ப்புற சுய உதவிக் குழுக்களுக்கு ரூ.1.34 லட்சம் கோடி வங்கிக் கடன் வழங்கப்பட்டு, பெண்களின் பொருளாதாரச் சுதந்திரம் உறுதி செய்யப்பட்டுள்ளது. மேலும் பள்ளி மாணவர்களின் ஊட்டச்சத்து மற்றும் வருகையை உறுதி செய்யும் வகையில், 19.34 லட்சம் குழந்தைகள் முதல்வரின் காலை உணவுத் திட்டத்தின் மூலம் பயனடைந்து வருகின்றனர்.

அயோத்திதாசப் பண்டிதர் மற்றும் தொல்குடி திட்டங்களின் கீழ், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் வசிக்கும் பகுதிகளில் தலா ரூ.1000 கோடி மதிப்பிலான உட்கட்டமைப்பு வசதிகள் உருவாக்கப்படுகின்றன. அம்பேத்கர் அயலக கல்வித் திட்ட நிதி ரூ.36 லட்சமாக உயர்த்தப்பட்டு, 385 மாணவர்கள் வெளிநாடுகளில் பயின்று வருகின்றனர். ‘காலனி’ என்ற சொல் ஆவணங்களிலிருந்து நீக்கப்பட்டுள்ளது. நன்னிலம் மகளிர் நிலவுடைமை திட்டத்தின் மூலம் 1,026 ஆதிதிராவிடப் பெண்களுக்கு ரூ.50 கோடி மானியம் அளிக்கப்பட்டு, அவர்கள் நில உடைமையாளர்களாக மாற்றப்பட்டுள்ளனர்.

27.55 லட்சம் முதியோர் மற்றும் மாற்றுத் திறனாளிகளுக்கு ரேஷன் பொருட்கள் வீடுகளுக்கே சென்று வழங்கப்படுகின்றன. ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின மக்களின் சமூகப் பொருளாதார நிலையை உயர்த்த இதுவரை 3 லட்சம் இலவச வீட்டுமனை இணையவழி பட்டாக்கள் வழங்கப்பட்டுள்ளன. மேலும் போதைப் பொருட்கள் இல்லாத தமிழ்நாடு இயக்கம் மற்றும் இளைஞர்களுக்கான அறவுணர்வுப் பயிலரங்கங்கள் மூலம் தமிழகத்தின் எதிர்காலம் உறுதி செய்யப்படுகிறது. இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

## ஸ்டாலின் முன்னிலையில் திமுகவில் இணைந்தார் அதிமுக முன்னாள் அமைச்சர் வைத்திலிங்கம்

சென்னை, ஜன.22-

திமுக தலைவரும், தமிழக முதல்வருமான மு . க . ஸ்டாலின் முன்னிலையில் அக்கட்சியில் இணைந்தார் அதிமுக முன்னாள் அமைச்சர் ஆர்.வைத்திலிங்கம். இவர் ஓபிஎஸ்ஸின் தீவிர ஆதரவாளராக இருந்தவர்.

முன்னதாக, ஒரத்தநாடு தொகுதி எம்எல்ஏவாக இருந்த அவர் தனது எம்எல்ஏ பதவியை ராஜினாமா செய்தார். சட்டப்பேரவைக்கு சென்று சபாநாயகர் அப்பாவுவிடம் தனது ராஜினாமா கடிதத்தை வழங்கினார். தொடர்ந்து அவர் திமுகவில் இணைவார் என்று செய்திகள் வெளியாகின.

எதிர்பார்த்தபடி, அவர் ராஜினாமாவுக்குப் பின்னர் சென்னை அண்ணா அறிவாலயத்துக்குச் சென்று ஸ்டாலின் முன்னிலையில் திமுகவில் தன்னை இணைத்துக் கொண்டார்.

4 முறை எம்எல்ஏ.. வைத்திலிங்கம் 4 முறை



ஒரத்தநாடு எம்எல்ஏவாக இருந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது. அதிமுக ஆட்சியில் அமைச்சராகவும் இருந்துள்ளார். அதிமுக உட்கட்சி பூசலின் விளைவாக ஓபிஎஸ் ஆரம்பித்த அதிமுக தொண்டர் உரிமை மீட்புக் குழுவில் வைத்திலிங்கம் இருந்தார். ஓபிஎஸ்ஸின் தீவிர ஆதரவாளராகவே அவர் பார்க்கப்பட்டவர்.

இந்நிலையில் அவர் இன்று திமுகவில் இணைந்துள்ளார். கட்சித் தாவல் தடை சட்டத்தின்படி எம்எல்ஏவாக இருப்பவர் இன்னொரு கட்சியில் சேரக்கூடாது என்பதால் ஒரத்தநாடு எம்எல்ஏ பதவியை ராஜினாமா செய்துவிட்டு அவர் திமுகவில் இணைந்துள்ளார்.

வைத்திலிங்கம் திமுகவில் இணைந்துள்ளது ஓபிஎஸ் அரசியலுக்கு நெருக்கடியாகவே பார்க்கப்படுகிறது. ஏற்கெனவே தேசிய ஜனநாயக கூட்டணியில் இருந்து வெளியே வந்துவிட்ட ஓபிஎஸ், அவரது ஒவ்வொரு ஆதரவாளராக இழந்து வருகிறார்.

அவரது ஆதரவாளர்கள் மனோஜ் பாண்டியன் ஆலங்குளம் எம்எல்ஏ பதவியை ராஜினாமா செய்துவிட்டு திமுகவில் இணைந்தார், அதேபோல் மருது அழகுராஜ், முன்னாள் எம்எல்ஏ சுப்புரத்தினம் ஆகியோரும் திமுகவில் இணைந்தனர் என்பது நினைவுகூரத்தக்கது.

திமுகவில் இணைந்தது ஏன்? திமுகவில் இணைந்த பின்னர் செய்தியாளர்களை சந்தித்த வைத்திலிங்கம், “எடப்பாடி பழனிசாமி தலைமையில் அதிமுக செயல்பாடுகள் உகந்ததாக இல்லை. அதிமுக சுதந்திரமாக செயல்படவில்லை. சர்வாதிகாரமாக செயல்படுகிறது.

அதிமுகவில் சேருமாறு தனிப்பட்ட முறையில் எனக்கு அழைப்பு வந்தது. நான் அங்கு தனியாக இணைய விரும்பவில்லை. பிரிந்தவர்கள் ஒன்றாக சேர வேண்டும் என்ற நோக்கில் நான் அதிமுகவுக்கு செல்லவில்லை.

அதேபோல், கூட்டணி தொடர்பான முடிவில் ஓபிஎஸ் தாமதம் செய்ததால் திமுகவில் இணைந்துள்ளேன்.


ஆனால், தமிழக முதல்வர் ஸ்டாலினை மக்கள் போற்றுகிறார்கள். எல்லாருடைய தேவைகளையும் பூர்த்தி செய்து மக்கள் மனதில் உள்ளார் ஸ்டாலின். அதனால் அண்ணா தொடங்கிய தாய் கழகத்தில் இணைந்துள்ளேன்.

## மதுரை மாநகரில் ரூ.100 கோடியில் 976 புதிய சாலைகள் அமைக்க நடவடிக்கை

மதுரை, ஜன.22-

மதுரை மாநகரப் பகுதியில் மழை வெள்ளத்தால் மிக மோசமாக சேதமடைந்த சாலைகள் உட்பட மொத்தம் 979 சாலைகள், ரூ.100 கோடியில் அமைக்கப்படுகின்றன. ஆணையர் சித்ராவின் இந்த களுக்கு விடிவுகாலம் நடவடிக்கையால் ஓர் ஆண்டாக மோசமாக காணப்பட்ட சாலை கிடைக்கப் போவதால் பொதுமக்கள் மகிழ்ச்சியடைந் துள்ளனர்.

மதுரை மாநகராட்சியின் 100 வார்டுகளிலும் முல்லை பெரியாறு குடிநீர் திட்டம், விரிவாக்கம் செய்யப்பட்ட வார்டுகளில் புதிய பாதாள சாக்கடை திட்டம் போன்றவை ஒரே நேரத்தில் நடந்தன. இப்பணிகள் நடந்து கொண்டிருக்கும்போதே, கோடை மழை, தென்மேற்கு மற்றும் வடகிழக்கு பருவமழை ஆகியவற்றால்,




சாலைகளை பராமரிப்பதிலும், திட்டமிட்டபடி குடிநீர் திட்டம், புதிய பாதாள சாக்கடை திட்டங்களை நிறைவேற்றுவது மாநகராட்சி நிர்வாகத்துக்கு சவாலாக இருந்தது. பொதுமக்களும் பழுதடைந்த சாலைகளில் செல்வதற்கு மிகுந்த சிரமம் அடைந்தனர்.

கடந்த டிசம்பரில் முல்லை பெரியாறு குடிநீர் திட்டத்தை முதல்வர் தொடங்கிவைப்பதாக இருந்ததால் ஆணையர் சித்ரா, அப்பணியை எடுத்த ஒப்பந்த நிறுவனங்களை இரவு, பகலாக முடுக்கிவிட்டு திட்டமிட்டபடி துரிதமாக முடித்து திறப்பு விழா கண்டு, தற்போது பொதுமக்களுக்கு குடிநீர் தடையின்றி கிடைக்கிறது. புறநகரில் விரிவாக்கம் செய்த வார்டுகளிலும் பாதாள சாக்கடை திட்டம் நிறைவுபெற்று வீடுகள் தோறும் இணைப்புகள் வழங்கப்பட்டு வருகின்றன. இந்த 2 பெரிய திட்டப் பணிகளால் சேதமான மாநகர சாலைகள், அடுத்தடுத்த மழையால் சேதமடைந்த மிக மோசமான சாலைகளை மறுசீரமைக்க ஆணையர் சித்ரா நடவடிக்கை எடுத்தார்.

அவரது உத்தரவின் பேரில் மண்டலம் வாரியாக பொறியியல் பிரிவு அதிகாரிகள் சேதமடைந்த சாலைகளை கணக்கெடுத்தனர். அவற்றை புதுப்பிப்பதற்கு ஆணையர் சித்ரா முயற்சியில், நகர்ப்புற சாலைகள் மேம்பாட்டு திட்டத்தில் புதிய சாலைகள் போடுவதற்கு ரூ.100 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இதுகுறித்து மாநகராட்சி பொறியியல் பிரிவு அதிகாரிகள் கூறுகையில், மதுரை மாநகரில் சேதமடைந்த சாலைகளை மறுசீரமைக்கவும், பராமரிக்கவும் டூரிப் திட்டத்தில் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. தமிழக அரசு அரசின் பங்களிப்பாக ரூ.65 கோடியும்,மாநகராட்சியின் பங்களிப்பாக பொதுநிதியில் இருந்து ரூ.35 கோடியும் வழங்கப்பட்டுள்ளது. 100 வார்டுகளில் 979 மோசமான சாலைகளை தேர்வு செய்து மொத்தம் 141 கி.மீ. தொலைவுக்கு இந்த புதிய சாலைகள் போடப்படுகின்றன. வரும் 23ம் தேதி இந்த சாலைகள் மறுசீரமைப்பு திட்டத்துக்கு ஒப்பந்தம் விடப்படுகிறது. தொடங்கிய ஒரே மாதத்தில் பணிகளை முடிக்க ஆணையர் சித்ரா உத்தரவிட்டுள்ளார். என்று தெரிவித்தனர்.

ஆணையர் சித்ராவின் முயற்சியால் ரூ.100 கோடி நிதி ஒதுக்கீடு பெறப்பட்டு நடக்கும் இந்த சாலை மேம்பாட்டு பணி களால், நீண்ட காலமாக மிக மோசமாக காணப்படும் சாலைகளுக்கு விமோசனம் கிடைக்க உள்ளதால் மக்கள், வாகன ஓட்டிகள் மகிழ்ச்சியடைந்துள்ளனர்.



## சேலையூர் பகுதி கழக சார்பில் எம்ஜிஆர் 109வது பிறந்தநாளை முன்னிட்டு திருவுருவப்படத்திற்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார்கள்

தாம்பரம், ஜன.22-

செங்கல்பட்டு மாவட்டம் தாம்பரம் மாநகராட்சி உட்பட்ட சேலையூர் பகுதி சார்பில் அதிமுக நிறுவனரும் முன்னாள் முதலமைச்சருமான எம்ஜிஆர் அவர்களின் 109வது பிறந்த நாளை விழா சேலையூர் பகுதி செயலாளர் எதிர்க்கட்சித் தலைவருமான சேலையூர் ஜி.சங்கர் தலைமையில் நடைபெற்றது.

இந்த நிகழ்ச்சியில் பகுதி துணைச் செயலாளர் டி.அய்யனார், அவைத்தலைவர் எஸ்.அய்யனார், வட்ட கழகச் செயலாளர் ஆதி ஜெகதீசன், வட்ட பிரதிநிதிகள் செல்வம், அன்பு, பகுதி இலக்கிய அணி செயலாளர் மதிவாணன், வர்த்தக அணி தலைவர் என்.இ.பாஸ்கர், அம்மா பேரவை பகுதி தலைவர் வேணுகோபால், குமார், 65வது வார்டு வட்டப் பிரதிநிதி குமரவேல், ஜானகிராமன், பகுதி தகவல் தொழில்நுட்ப பிரிவு தலைவர் எம்.பாலாசுந்தரம் ஆகியோர் கலந்து கொண்டு எம்ஜிஆர் அவர்களின் 109வது பிறந்த நாளை முன்னிட்டு திருவுருவப்படத்திற்கு மலர்தூவி மரியாதை செலுத்தினர் இதில் பகுதி அதிமுக நிர்வாகிகள், வட்ட நிர்வாகிகள் அணியின் நிர்வாகிகள் மற்றும் பொதுமக்கள் அனைவரும் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

## முன்னாள் முதல்வர் எம்ஜிஆரின் 109-வது பிறந்த நாளை முன்னிட்டு இலவச மருத்துவ முகாம். மாவட்ட செயலாளர் சிட்லபாக்கம் ச.ராஜேந்திரன் பங்கேற்பு

தாம்பரம், ஜன.22-

செங்கல்பட்டு மாவட்டம் தாம்பரம் அடுத்த செம்பாக்கத்தில் மறைந்த முன்னாள் முதல்வரும் புரட்சித் தலைவருமான எம்.ஜி.ஆர் அவர்களின் பிறந்த நாளை முன்னிட்டு, செம்பாக்கம் பகுதியில் உள்ள தனியார் அரங்கில் இலவச மருத்துவ முகாம் சிறப்பாக நடைபெற்றது.

இந்த முகாமில் கண் மருத்துவம், பல் மருத்துவம் மற்றும் பொது மருத்துவம் உள்ளிட்ட சிகிச்சைகள் பொதுமக்களுக்கு இலவசமாக வழங்கப்பட்டன. ஏராளமான பொதுமக்கள் கலந்து கொண்டு மருத்துவ சேவைகளைப் பெற்றனர்.



இந்த இலவச மருத்துவ முகாமை தாம்பரம் மாநகர 39வது வார்டு தெற்கு வட்ட அதிமுக செயலாளர் அப்பு வி.நாகராஜ் ஏற்பாடு செய்திருந்தார்.

முகாமில் சிறப்பு அழைப்பாளராக செங்கல்பட்டு மேற்கு மாவட்ட அதிமுக செயலாளர் சிட்லபாக்கம் ச.இராஜேந்திரன் கலந்து கொண்டு முகாமை தொடங்கி வைத்து, பொதுமக்களின் நலனுக்காக இதுபோன்ற சேவைப் பணிகள் தொடர்ந்து நடைபெறும் என தெரிவித்தார்.

நிகழ்ச்சியில் மாவட்ட மருத்துவ அணி செயலாளர் ஆர்.பாலாஜி, செங்கல்பட்டு மேற்கு மாவட்ட எம்.ஜி.ஆர் மன்ற இணை செயலாளர் எஸ்.ஏ.விஜயராகவன், சிட்லபாக்கம், செம்பாக்கம் பகுதி அதிமுக செயலாளர் இரா.மோகன், மாவட்ட அம்மா பேரவை செயலாளர் புருஷோத்தம்மன், மாவட்ட இலக்கிய அணி செயலாளர் முகுந்தன், காஞ்சிபுரம் மண்டல அண்ணா தொழிற்சங்க செயலாளர் வேணுகோபால், மாவட்ட அம்மா பேரவை தலைவர் சம்பத்குமார், பகுதி கழக இணை செயலாளர்

எஸ்.ராஜாத்தி, பகுதி துணை செயலாளர் வி.கோபாலகிருஷ்ணன், பகுதி மாவட்ட பிரதிநிதி லோகேஷ், வட்ட செயலாளர்கள் வேதகிரி, பாலாஜி, கிளாசக் சந்திரன், ரவிசங்கர், மாவட்ட இலக்கிய அணி துணை செயலாளர் டேனியேல் மற்றும் நிர்வாகிகள் அபீப் அலி, வெங்கடேஷ், ஜெகன், ஆனந்த், தீபக் ராஜ், உமர், தினேஷ், தமிழரசு, தீபன், ஹரீஸ் உள்பட பலர் கலந்து கொண்டனர்



## காரைக்குடி புதிய மாவட்டம் இரண்டு நீதிமன்றங்கள் அமைக்கும் படி அனைத்துக் கட்சிகளின் ஆலோசனைக்கூட்டம் நடந்தது

காரைக்குடி, ஜன.22-

சிவகங்கை மாவட்டம் காரைக்குடி தொழில் வணிகக் கழகம் ஏற்பாட்டில் இன்று(சனவரி 20) மாலையில் தலைவர் சாமிதிராவிடமணி தலைமையில் தொடங்கியது. செயலாளர் எஸ்.கண்ணப்பன் வரவேற்று பேசினார்கள். இக்கூட்டத்திற்கு அனைத்துக் கட்சியினர், சேவைச்சங்களின், வியாபாரிகள் நிர்வாகிகள் ஏராளமானவர்கள் கலந்து கொண்டனர்.,இக்கூட்டத்தில் தி.மு.க. அதிமுக, காங், த.வெ.க, சிபிஐ, ம.தி.மு.க, வி.சி.க, தி.க, தி.இ. தமிழர் பேரவை, ஏஐடியுசி, மற்றும் ரோட்டரி சங்கம், அரிமா சங்கம், இரயில் பயணிகள் சங்கம், கட்டிடப்பொறியாளர்கள் சங்கம், தமிழ்த்தாய் கலைக்கூடம், விஏஓ சங்கம், நடையாளர் கழகம்,மற்றும் பல்வேறு சங்கப்பிரதிநிதிகள் உட்பட பலர் பங்கேற்றனர்.,

தீர்மானங்கள்விபரம்:

காரைக்குடி பகுதியில் பல்வேறு வசதிகளைக் கொண்டு, தொழில், வணிகம், கல்வி நிறுவனம், மக்கள் தொகை, வாக்காளர் எண்ணிக்கையுடன் மாபெரும் வளர்ச்சியடைந்துள்ளதாலும், இம்மாவட்டத்தில், தற்சமயம் 9 தாலுக்காவும், 12 ஒன்றியமும், 12, பேரூராட்சியும், 440 கிராம ஊராட்சிகளுடன் 3 நகராட்சியும்,1 மாநகராட்சியும், 4 சட்டமன்றத் தொகுதிகளும் அமைந்திருப்பதால், அனைவருக்கும் அரசின் அனைத்து நலத்திட்டங்களும், மக்கள் நலப் பயன்களும் விரைவாக சென்றடையவும், நிர்வாகப் பகிர்வுகளை பரவலாக்கவும், காரைக்குடியை புதிய வருவாய் மாவட்டமாக அறிவிக்க வேண்டும் என ஏகமனதாக இக்கூட்டம் தமிழ்நாடு முதலமைச்சரைக் கேட்டுக் கொள்கிறது என்ற தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. 2) காரைக்குடியில் புதிய சார்பு நீதிமன்றமும், புதிய கூடுதல் மாவட்ட நீதிமன்றமும் அமைத்திட வேண்டுமென சட்டத்துறையின் நீதிமன்ற ஆய்வுக் குழுவின் முடிவுப்படி அரசுக்கு அனுப்பிய அறிக்கையை ஏற்று உடனடியாக நிறைவேற்றும் படி மாநில அரசைக் கேட்டுக்கொண்டு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. இரண்டு தீர்மானங்களை ஏற்றுகையொலி மூலம் வரவேற்றார்கள்.

### வேலைநாடும் இளைஞர்கள் பயன்பெறும் வகையில், வருகின்ற 23.1.2026 அன்று, மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மைய அலுவலக வளாகத்தில் வேலைவாய்ப்பு முகாம் நடைபெறவுள்ளது மாவட்ட ஆட்சித்தலைவர் கா.பொற்கொடி தகவல்

சிவகங்கை, ஜன.22-

வேலைவாய்ப்பற்ற இளைஞர்களின் வேலைவாய்ப்பு மற்றும் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் பொருட்டு, ஒவ்வொரு மாதமும் இரண்டாம் அல்லது மூன்றாம் வெள்ளிக்கிழமையன்று சிறிய அளவிலான தனியார்துறை வேலைவாய்ப்பு முகாம் சிவகங்கை மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் அலுவலகத்தில் நடைபெற்று வருகிறது. அதன்படி, வருகின்ற 23.1.2026 (வெள்ளிக்கிழமை) அன்று காலை 10.30 மணியளவில் சிவகங்கை மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மைய அலுவலக வளாகத்தில் சிறிய அளவிலான வேலைவாய்ப்பு முகாம் நடைபெறவுள்ளது. இம்முகாமில், வேலை அளிக்கும் நிறுவனங்கள் கலந்து கொண்டு தங்களுக்கு தேவையான ஆட்களை தேர்வு செய்து கொள்ளலாம். சிவகங்கை மாவட்டத்தைச் சேர்ந்த வேலை நாடுநர்கள் இவ்வாய்ப்பினைப் பயன்படுத்தி தனியார் நிறுவனங்களில் வேலை வாய்ப்பினைப் பெறலாம்.

மேலும், இம்முகாமில் இலவச திறன் பயிற்சிக்கான விண்ணப்பபடிவம், போட்டித் தேர்வுகளுக்கான இலவசப்பயிற்சி வகுப்பில் மாணவர் சேர்க்கை, வேலைவாய்ப்பற்ற இளைஞர்களுக்கான உதவித்தொகை பெறுவதற்கான விண்ணப்ப படிவம் ஆகியவையும் வழங்கப்படும். எனவே, விருப்பமுள்ளவர்கள் பத்தாம் வகுப்பு முதல் பட்டப்படிப்பு வரை மற்றும் ஐ.டி.ஐ, டிப்ளமோ படித்த இளைஞர்கள் தங்களது கல்விச்சான்று, குடும்ப அட்டை, வேலைவாய்ப்பு அடையாள அட்டை, ஆதார் அட்டையுடன் இம்முகாமில் கலந்து கொண்டு பயன்பெறலாம். இம்முகாமில் பணிவாய்ப்பு பெறுவோருக்கு பதிவுமூப்பு ஏதும் ரத்து செய்யப்படமாட்டது. எனவே வேலைநாடுநர்கள் இம்முகாமில் கலந்து கொண்டு பயன்பெறலாம் என மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி கா.பொற்கொடி,இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.




## கிருஷ்ணகிரி நகராட்சி சத்ய சாய் நகரில் பொங்கல் விழா மதியழகன் எம் எல் ஏ பங்கேற்று பரிசுகள் வழங்கினார்

கிருஷ்ணகிரி, ஜன.22-

கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்டம், கிருஷ்ணகிரி நகராட்சிக்கு உட்பட்ட சத்யசாய் நகர் பகுதியில் சத்யசாய் நகர் குடியிருப்போர் நல சங்கம் சார்பில் 9ம் ஆண்டு பொங்கல் திருவிழா நடைபெற்றது. நிகழ்ச் சியில் சிறப்பு விருந்தினராக பர்கூர் சட்டமன்ற உறுப்பினர் மதியழகன் அவர்கள் கலந்து கொண்டு பல்வேறு போட்டிகளில் வெற்றி பெற்ற சிறுவர்கள், இளைஞர்கள், மகளிர் ஆகியோருக்கு பரிசுகளை வழங்கினார். பல்வேறு வகையான விளையாட்டு போட்டிகள் கோலப்போட்டி சைக்கிள் போட்டி மியூசிக்கல் சேர் லெமன் ஸ்பூன் வாலிபால் போட்டி உள்ளிட்ட பல்வேறு விளையாட்டுப் போட்டிகள் நடைபெற்றது போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கு பரிசுகளை வழங்கப்பட்டது நிகழ்ச்சியில் கிருஷ்ணகிரி மேற்கு நகர பொறுப்பாளர் அஸ்லாம்,கிழக்கு நகர பொறுப்பாளர் வேலுமணி, மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் டி சி ஆர் தினேஷ் ராஜன் உட்பட திமுக நிர்வாகிகள் மற்றும் சத்யசாய் நகர் விளையாட்டு கமிட்டி நிர்வாகிகள் மற்றும் பொதுமக்கள் பலர் கலந்து கொண்டனர்.

### ஆண்டிபட்டி சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட பகுதிகளில் வாக்காளர் பட்டியலில் பெயர் சேர்த்தல், நீக்கம் மற்றும் திருத்தம் தொடர்பாக நடைபெற்று வரும் பணிகள் குறித்து

## மாவட்ட கண்காணிப்பு அலுவலர் / தமிழ்நாடு மின் உற்பத்தி நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் எம்.கோவிந்தராவ் தலைமையில், மாவட்ட தேர்தல் அலுவலர் / மாவட்ட ஆட்சித்தலைவர் ரஞ்ஜீத் சிங் முன்னிலையில் சம்பந்தப்பட்ட அலுவலர்களுடனான ஆய்வுக்கூட்டம்

தேனி, ஜன.22-

தேனி மாவட்டம், ஆண்டிபட்டி வட்டாட்சியர் அலுவலகக் கூட்டரங்கில் ஆண்டிபட்டி சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட பகுதிகளில் வாக்காளர் பட்டியலில் பெயர் சேர்த்தல், நீக்கம் மற்றும் திருத்தம் தொடர்பாக நடைபெற்று வரும் பணிகள் குறித்து மாவட்ட கண்காணிப்பு அலுவலர் / தமிழ்நாடு மின் உற்பத்தி நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் திரு.எம்.கோவிந்தராவ், இ.ஆ.ப., அவர்கள் தலைமையில், மாவட்ட தேர்தல் அலுவலர் / மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.ரஞ்ஜீத் சிங், இ.ஆ.ப., அவர்கள் முன்னிலையில் சம்பந்தப்பட்ட அலுவலர்களுடனான ஆய்வுக்கூட்டம் நடைபெற்றது.





இந்தியத் தேர்தல் ஆணையத்தின் அறிவுரையின்படி 01.01.2026 ஆம் தேதியினை தகுதி ஏற்படுத்தும் நாளாகக் கொண்டு, சிறப்பு தீவிரத்திருத்தம் பணிகளில் கடந்த 19.12.2025அன்று வரைவு வாக்காளர் பட்டியல் வெளியிடப்பட்டது. அதனைத் தொடர்ந்து வாக்காளர் பட்டியலில் புதிதாக பெயர் சேர்க்க (படிவம்6), நீக்கம் செய்ய (படிவம்7), முகவரி மாற்றம், பெயர் திருத்தம், வயது திருத்தம், மாற்று வாக்காளர் அடையாள அட்டை கோருதல், தொகுதி மாற்றம் (படிவம் 8) போன்றவற்றிற்கு குறிப்பிட்ட படிவங்களில் பூர்த்தி செய்து உரிய ஆவணங்கள் மற்றும் புகைப்படத்தினை இணைத்து வாக்குச்சாவடி மைய அலுவலரிடமும் (DLO), அனைத்து வாக்காளர் பதிவு அலுவ லகங்கள்/ வருவாய் கோட்டாட்சியர் அலுவலகங்கள், உதவி வாக்காளர் பதிவு அலுவலகங்கள்/ வட்டாட்சியர் அலுவலகங்கள் மற்றும் நகராட்சி அலுவலக ங்களிலும் விண்ணப்பிக்கலாம் எனவும், நேரில் வர இயலாதவர்கள் Voters.eci.gov.in என்ற இணையதளம் வாயிலாகவும் மற்றும் Voter Helpline App மூலமாகவும் 18.01.2026 வரை விண்ணப்பித்துக் கொள்ளலாம் என தெரிவிக்கப்பட்டிருந்தது. தற்பொழுது விண்ணப்பிப்பதற்கான கால அவகாசம் 30.01.2026 வரை நீட்டிப்பு செய்யப்பட்டுள்ளது.

அதனடிப்படையில், வாக்காளர் பட்டியலில் புதிதாக பெயர் சேர்க்க, நீக்கம் செய்ய மற்றும் திருத்தம் மேற்கொள்ள வாக்காளர்களால் உரிய படிவங்களில் பூர்த்தி செய்து வழங்கப்பட்டு வரும் பணிகள் குறித்து வாக்காளர் பதிவு அலுவலர்கள், உதவி வாக்காளர் பதிவு அலுவலர்கள், கண்காணிப்பு அலுவலர்கள் மற்றும் வாக்குச்சாவடி நிலை அலுவலர்களுடன் ஆய்வு மேற்கொண்டார்கள். மேலும், முதல்முறை வாக்காளர்களின் பெயர்கள் வாக்காளர் பட்டியலில் இடம்பெறுவதை உறுதி செய்யும் வகையிலும் மற்றும் தகுதியான எந்த ஒரு வாக்காளர்களும் வாக்காளர் பட்டியலிலிருந்து விடுபடாத வகையிலும் பணிகளை மேற்கொள்ளுமாறு மாவட்ட கண்காணிப்பு அலுவலர் அவர்கள் சம்பந்தப்பட்ட அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்கள்.

இக்கூட்டத்தில் வாக்காளர் பதிவு அலுவலர் / பெரியகுளம் சார் ஆட்சியர் திரு.ரஜத் பீடன், இ.ஆ.ப., வாக்காளர் பதிவு அலுவலர் / தனித்துணை ஆட்சியர் (ச.பா.தி.)

திருமதி கவிதா, உதவி வாக்காளர் பதிவு அலுவலர் / நகராட்சி ஆணையாளர் திருமதி முத்துலெட்சுமி (கூடலூர்), உதவி வாக்காளர் பதிவு அலுவலர் / வட்டாட்சியர் திரு.ஜாஹிர் உசேன்(ஆண்டிபட்டி) உட்பட பலர் கலந்து கொண்டனர்.



## தமிழ்நாடு மாநில குழந்தைகள் உரிமைகள் பாதுகாப்பு ஆணையத்தலைவர் புதுக்கோட்டை விஜயா தலைமையில் மாவட்ட அளவிலான குழந்தைகள் பாதுகாப்புக்குழு உறுப்பினர்களுக்கான கூராய்வுக்கூட்டம்

தென்காசி, ஜன.22-

தென்காசி மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் இன்று (21.01.2026) தமிழ்நாடு மாநில குழந்தைகள் உரிமைகள் பாதுகாப்பு ஆணையத்தலைவர் திருமதி.புதுக்கோட்டை விஜயா அவர்கள் தலைமையில் மாவட்ட அளவிலான குழந்தைகள் பாதுகாப்புக்குழு உறுப்பினர்களுக்கான கூராய்வுக்கூட்டம் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.ஏ.கே. கமல்கிஷோர், இ.ஆ.ப., அவர்கள், மாவட்ட காவல் கண்காணிப்பாளர் திரு.ஜி.எஸ்.மாதவன் அவர்கள், உறுப்பினர்கள் முனைவர்.வீ.உஷா நந்தினி அவர்கள், வழக்கறிஞர் திருமதி.ஜெயசுதா அவர்கள் ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில், மாவட்ட குழந்தை பாதுகாப்பு அலகு, பள்ளிக்கல்வித்துறை, சமூகநலத்துறை, காவல்துறை, குழந்தை தொழிலாளர் துறை, சுகாதாரத்துறை, குழந்தைகள் நலக்குழு, ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சித்திட்டம் மற்றும் குழந்தைகள் உதவி எண்.1098 ஆகிய குழந்தைகள் நலன் தொடர்பான துறைகளின் அறிக்கைகள் மற்றும் அத்துறைகளினால் குழந்தைகள் நலனுக்காக மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் குறித்துதமிழ்நாடு மாநில குழந்தைகள் உரிமைகள் பாதுகாப்பு ஆணையத்தலைவர் திருமதி.புதுக்கோட்டை விஜயா அவர்கள் ஆலோசனை மேற்கொண்டார் .

தொடர்ந்து, போதை பொருள் ஒழிப்பு தொடர்பான விழிப்புணர்வு பாடல் குறித்த குறுந்தகட்டினை தமிழ்நாடு மாநில குழந்தைகள் உரிமைகள் பாதுகாப்பு ஆணையத் தலைவர் அவர்கள், மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் மற்றும் உறுப்பினர்கள் ஆகியோர் வெளியிட்டார்கள்.

இந்நிகழ்வில், மாவட்ட வருவாய் அலுவலர் திரு.ஜெயச்சந்திரன், கூடுதல் மாவட்ட கண்காணிப்பாளர் ஜூலியர் ஜீஸர், மாவட்ட குழந்தை பாதுகாப்பு அலுவலர் திரு.எல். அலெக்ஸ், இளைஞர் நீதிக்குழும உறுப்பினர் திரு.வேல்ராஜன், குழந்தை நலக்குழு தலைவர் திருமதி.விஜயராணி, முதன்மை கல்வி அலுவலர் திருமதி.ஆ.ரேணுகா, மாவட்ட சமூகநல அலுவலர் செல்வி.மதிவதனா மற்றும் குழந்தைகள் நலன் தொடர்புடைய துறைகளை சார்ந்த அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



## செயல் விளக்க பணிக்காக ஓசூருக்கு மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்கள் அனுப்பி வைப்பு

கிருஷ்ணகிரி, ஜன.22-

செயல் விளக்க பணிக்காக ஓசூர் சப்-கலெக்டர் அலுவலகத்திற்கு மின்னணு வாக்குப்பதிவு எந்திரங்கள் அனுப்பி வைக்கப்பட்டன.

கிருஷ்ணகிரி தாசில்தார் அலுவலகத்தில் பாதுகாப்பாக வைக்கப்பட்ட மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்கள் ஓசூர் சப்-கலெக்டர் அலுவலகத்திற்கு செயல்விளக்க பணிகளுக்காக கலெக்டரும், மாவட்ட தேர்தல் அலுவலருமான தினேஷ்குமார் தலைமையில், அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சி பிரமுகர்கள் முன்னிலையில் நேற்று அனுப்பி வைக்கப்பட்டது.

தொடர்ந்து கலெக்டர் கூறியதாவது: இந்திய தேர்தல் ஆணைய உத்தரவுப்படி கிருஷ்ணகிரி மாவட்டத்தில் வருகிற சட்டமன்ற பொதுத் தேர்தலை முன்னிட்டு வாக்காளர்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தப்படுகிறது. அதன்படி வாக்குப்பதிவு இயந்திரத்தில் வாக்குப்பதிவு செய்தல் தொடர்பாக விழிப்புணர்வு மேற்கொள்வது குறித்து மாவட்ட கலெக்டர் அலுவலகம், உதவி கலெக்டர் அலுவலகத்தில் இன்று (நேற்று) முதல் மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்கள் செயல்விளக்க மையம் அமைக்கப்பட உள்ளது.

வருகிற 25ம் தேதி முதல் ஒரு சட்டமன்றத் தொகுதிக்கு ஒரு வாகனம் வீதம் ஆறு மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்கள் செயல் விளக்க வாகனம் மூலம் அனைத்து வாக்குச் சாவடி மையங் களையும் உள்ளடக்கிய பகுதிகளில் விழிப்புணர்வு மேற்கொள்ளப்பட உள்ளது. அதன்படி வாக்காளர் பயிற்சி மற்றும் விழிப்புணர்வு நோக்கத்திற்காக வேப்பனஹள்ளி, ஓசூர், தளி சட்டமன்றத் தொகுதிக்கு 45 மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்கள் ஒதுக்கப்பட்டுள்ளது.

அவை கிருஷ்ணகிரி தாசில்தார் அலுவலகத்தில் உள்ள பாதுகாப்பு அறையிலிருந்து ஓசூர் சப்- கலெக்டர் அலுவலகத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. 60 வாக்குப்பதிவு இயந்திரங்கள் மாவட்ட கலெக்டர் அலுவலகம், கிருஷ்ணகிரி வருவாய் கோட்டாட்சியர் அலுவலகம், ஊத்தங்கரை, பர்கூர், கிருஷ்ணகிரி ஆகிய சட்டமன்றத் தொகுதிகளுக்கு உட்பட்ட வாக்குச்சாவடி மையங்கள் உள்ளடக்கிய பகுதிகளில் விழிப்புணர்வு மேற்கொள்ள பயன்படுத்தப்பட உள்ளது. வாக்காளர்கள் இந்த விழிப்புணர்வு பிரசாரத்தின் மூலம் மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்களின் செயல்பாடுகள் குறித்து நேரடியாக அறிந்து கொள்ளலாம். இவ்வாறு அவர் கூறினார்.

அப்போது கலெக்டரின் நேர்முக உதவியாளர் (பொது) கோபு, தாசில்தார்கள் குணசிவா, ரமேஷ், தேர்தல் பிரிவு தனி தாசில்தார் சம்பத், தனி தாசில்தார் மகேஸ்வரி மற்றும் அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சி பிரமுகர்கள் உடன் இருந்தனர்.

## இந்தி ஆதிக்கத்தை வேரறுக்க எழுந்த மொழிப்போர் தியாகிகள் தின வீரவணக்க நாள் பொதுக்கூட்டம். நாடாளுமன்ற உறுப்பினர் மருத்துவர் கலாநிதி வீராசாமி அவர்கள் எழுச்சி உரையாற்றுகிறார் மாவட்ட கழக செயலாளர் தே.மதியழகன் எம்எல்ஏ., அறிக்கை

கிருஷ்ணகிரி, ஜன.22-

கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்ட செயலாளரும் பர்கூர் சட்டமன்ற உறுப்பினருமான மதியழகன் அவர்களின் அறிக்கை:

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் நமக்குக் கற்பித்துச் சென்ற ஐம்பெரும் கொள்கை முழக்கங்களில் முதன்மையானது "இந்தித் திணிப்பை என்றும் எதிர்ப்போம்" என்ற முழக்கம் நம் உயிரில் கலந்தது, உணர்வில் பதிந்தது.

1930களிலும் 1965லும் இந்தியின் ஆதிக்க அலைக்கு எதிராகத் தமிழ்நாட்டைத் தற்காத்தது திராவிட இயக்கம். தந்தை பெரியார் ஊட்டிய இன உணர்வும், பேரறிஞர் அண்ணா நமக்களித்த "இருமொழிக் கொள்கை" எனும் எஃகு அரணும் 'தாழப் பறக்காது எங்கள் தமிழ்க்கொடி' என முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் உயர்த்திப் பிடித்த கொள்கை முன்னெடுப்புகளும் டெல்லி அதிகார மையங்களின் நகங்கள் கூட தமிழ்நாட்டைத் தொட்டுப்பார்க்க முடியாது என்ற நிலையை உருவாக்கியது.

பேரறிஞர் அண்ணா தந்த இருமொழிக் கொள்கையால் இன்று தமிழ்நாடு அடைந்திருக்கும் உயரம் உலகறிந்தது. 'தமிழருக்கு அவர் தாய்மொழி உலகத்தோடு உறவாட ஆங்கிலம்' என நம்முடைய இருமொழிக் கொள்கையால் இந்திய மாநிலங்களுக்கே வழிகாட்டியாகத் திகழ்கிறது தமிழ்நாடு. நம்முடைய புறநானூற்றுப் படைத் தலைமைகளின் வழித்தோன்றலாக, வரலாற்றின் தொடர்ச்சியாக, நம் கழகத் தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் மாண்புமிகு தளபதியார் அவர்கள், இந்தித் திணிப்பு எனும் கோரைப் பற்களுக்கு எதிராக மாநில மொழியுரிமை வாளையும், தமிழின் தொன்மை மரபை உலகுக்கு உணர்த்தும் கீழடி கேடயத்தையும் ஏந்தி நிற்கிறார். இந்தியைக் கொண்டு வந்து நம்மிடம் வாலாட்டத் துடிக்கும் சங்கிகளுக்கும்,



சர்வாதிகாரிகளுக்கும் நம்முடைய இளைஞரணிச் செயலாளர், தமிழ்நாடு துணை முதலமைச்சர் மாண்புமிகு இளம் தலைவர் அவர்கள் சிம்ம சொப்பனமாக விளங்குகிறார்.

எரிநெருப்பும், சிந்திய ரத்தமும் அதில் கலந்த மொழிப்போர் வீரர்களின் தியாகமும் நமக்கு உணர்த்தும் வரலாறுச் செய்தி ஒன்றுதான். "உரிமைப் போரில் உறங்குபவனுக்கு வாழ்வு கிடையாது" வரும் ஜனவரி 25ம் தேதியன்று, மொழிப்போர் தியாகிகள் தினத்தில் நாம் எடுக்கும் உறுதிமொழி நமக்குச் சடங்கான செயல் அல்ல. அது ஆதிக்கவாதிகளின் செவிகளுக்கு பேரறிஞர் அண்ணா, முத்தமிழறிஞர் கலைஞர், கழகத் தலைவர் வழியில் நாம் விடுக்கும் அறைகூவல்.

இந்தித் திணிப்பை என்றும் எதிர்ப்போம்! எங்கள் மொழி, எங்கள் அடையாளம் என்கிற முழக்கத்தோடு வருகிற 25 01- 2025 ஞாயிற்றுக்கிழமை மாலை 0500 மணிக்கு கிருஷ்ணகிரி 5 ரோடு ரவுண்டானாவில் கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்ட மாணவர் அணி சார்பாக, மாணவர் அணி மாவட்ட அமைப்பாளர் ஜெய் என்கின்ற ஜெயேந்திரன் அவர்களது தலைமையில் மொழிப்போர் தியாகிகளுக்கு வீரவணக்கம் செலுத்தும் வகையில் பிரம்மாண்ட பொதுக்கூட்டம் நடைபெற உள்ளது. இந்த பொதுக்கூட்டத்தில் நாடாளுமன்ற உறுப்பினர் மருத்துவர் கலாநிதி வீராசாமி அவர்களும், கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்ட செயலாளரும், பர்கூர் தொகுதி சட்டமன்ற உறுப்பினருமான திரு.தே. மதியழகன் MLA., அவர்களும் கலந்து கொண்டு எழுச்சி உரையாற்ற உள்ளார்கள். இந்த கூட்டத்தில் தலைமை கழக பேச்சாளர்கள் ஆலந்தூர் மலர்மன்னன் மற்றும் திருமதி. பவித்ரா ஆகியோர் கலந்து கொண்டு சிறப்புரையாற்ற உள்ளனர்கள்.

கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்டத்தைச் சேர்ந்த மாநில, மாவட்ட நிர்வாகிகள், முன்னாள் நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், ஒன்றிய, நகர, பேரூர் கழக செயலாளர்கள், நிர்வாகிகள், அனைத்து அணிகளின் தலைவர்கள், துணைத் தலைவர்கள், அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் உள்ளிட்ட நிர்வாகிகள், முன்னாள், இன்னாள் உள்ளாட்சி பிரதிநிதிகள், கழகத் தோழர்கள் கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன். இவ்வாறு அறிக்கையில் குறிப்பிட்டுள்ளது.



■ கடலூர், பெண்ணாடம் அரசு பெண்கள் மேல்நிலைப் பள்ளியில் வளமிகு வட்டார வளர்ச்சி திட்டத்தின் கீழ் சிறப்பு பேருந்து சேவையினை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சிபி ஆதித்யா செந்தில் குமார் தொடங்கி வைத்து, மாணவ/ மாணவியர்களுக்கு பேருந்தில் பயணம் மேற்கொள்வதற்கான அடையாள அட்டையினை வழங்கினார்.



■ மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர்.மனிஷ் நாரணவரே மாவட்ட ஆட்சியர் அலுவலகக் கூட்டரங்கில் நடைபெற்ற மக்கள் குறை தீர்க்கும் நாள் கூட்டத்தில் பொதுமக்களிடம் கோரிக்கை மனுக்களை பெற்றுக் கொண்டார்கள். உடன் மாவட்ட வருவாய் அலுவலர் திரு.க.கார்த்திகேயன் அவர்கள் உள்ளார்

### கிருஷ்ணகிரி மற்றும் போச்சம்பள்ளி ஒழுங்கு முறை விற்பனை கூடங்களில்

## உளுந்து 880 மெட்ரிக் டன், பச்சைப்பயறு 80 மெட்ரிக் டன் கொள்முதல் வருகிற மார்ச் 25ம் தேதி வரை நடைபெறுகிறது

கிருஷ்ணகிரி, ஜன.22-

கிருஷ்ணகிரி மற்றும் போச்சம்பள்ளி ஒழுங்கு முறை விற்பனை கூடங்களில் உளுந்து 880 மெட்ரிக் டன், பச்சைப்பயறு 80 மெட்ரிக் டன் கொள்முதல் செய்ய இலக்கு நிர்ணயிக்கப்பட்டு, கொள்முதல் வருகிற மார்ச் மாதம் 25ம் தேதி வரை நடைபெறுகிறது.

இது குறித்து மாவட்ட கலெக்டர் தினேஷ்குமார் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு: விவசாயிகளின் விலைள பொருட்களுக்கு உரிய விலை கிடைக்கவும், அவர்களின் வருவாயை பெருக்கவும் தமிழக அரசு அனைத்து முயற்சிகளையும் மேற்கொண்ட வருகிறது. உளுந்து மற்றும் பச்சைப்பயறு சாகுபடி செய்து, விவசாயிகள் பயன் பெறும் வகையில், விளைவித்த உளுந்து மற்றும் பச்சைப்பயறு விளைப்பொருட்களை ஒன்றிய அரசின் நாபெட் நிறுவனம் மூலமாக கொள்முதல் இலக்காக உளுந்து 880 மெட்ரிக் டன் மற்றும் பச்சைப்பயறு 80 மெட்ரிக் டன் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

தமிழக அரசு விவசாயிகள் நலன் கருதி நிர்ணயிக்கப்பட்ட தரத்திற்கு ஒன்றிய அரசின் குறைந்தபட்ச ஆதரவு விலையில் உளுந்து விலை 1 கிலோ ரூ.78க்கும், பச்சைபயறு விலை 1 கிலோ ரூ.87.88க்கு அடுத்த மூன்று மாத காலத்திற்குள் கொள்முதல் செய்யப்பட உள்ளது.

கிருஷ்ணகிரி மாவட்டத்தில் இத்திட்டம் கிருஷ்ணகிரி மற்றும் போச்சம்பள்ளி ஒழுங்கு முறை விற்பனைக் கூடாங்களில் செயல்பட உள்ளது. இத்திட்டத்தின் மூலம் பயன்பெறும் விவசாயிகள் நிலத்தின் சிட்டா, அடங்கல், ஆதார் அட்டை நகல் மற்றும் வங்கிக் கணக்கு ஆகிய விவரங்களுடன் கிருஷ்ணகிரி மற்றும் போச்சம்பள்ளி ஒழுங்குமுறை விற்பைனக் கூட கண்காணிப்பாளரை அணுகி பதிவு செய்து கொள்ளலாம்.

உளுந்து மற்றும் பச்சைப்பயறு கொள்முதல் வருகிற மார்ச் மாதம் 25ம் தேதி வரை நடைபெற உள்ளது. உளுந்து மற்றும் பச்சைப்பயறு விளைபொருட்களுக்கு உரிய தொகை விவசாயிகளின் வங்கிக் கணக்கில் நேரடியாக வரவு வைக்கப்படும் என தெரிவித்துக் கொள்ளப் படுகிறது. தமிழ்நாடு அரசு உளுந்து மற்றும் பச்சைப்பயறு விவசாயிகளின் நலனிற்காக மேற்கொண்டுள்ள இந்த கொள்முதல் திட்டத்தில் உளுந்து மற்றும் பச்சைப்பயறு விவசாயிகள் அதிக அளவில் கலந்துகொண்டு பயன்பெறலாம். இவ்வாறு தனது செய்திக்குறிப்பில் கலெக்டர் தினேஷ்குமார் தெரிவித்துள்ளார்.





### நாச்சியப்பா சுவாமிகள் கலை மற்றும் அறிவியல் கல்லூரி கோவிலூரில் உள்ள ஆங்கிலத் துறை சார்பில்

## தெசாரஸ் தின விழாவை மாணவர்கள் மற்றும் ஆசிரியர்கள் உற்சாகமான பங்கேற்புடன் வெற்றிகரமாக நடத்தினது

காரைக்குடி, ஜன.22-

சிவகங்கை மாவட்டம் கோவிலூர் நாச்சியப்பா சுவாமிகள் கலை மற்றும் அறிவியல் கல்லூரி, கோவிலூரில் உள்ள ஆங்கிலத் துறை, 21 ஜனவரி 2026 அன்று தெசாரஸ் தின விழாவை மாணவர்கள் மற்றும் ஆசிரியர்கள் உற்சாகமான பங்கேற்புடன் வெற்றிகரமாக நடத்தினது. இந்நிகழ்ச்சி கோவிலூர் ஆதீனம் சீர்வளர் சீர் நாராயண ஞானதேசிக சுவாமிகளின் அருளாசியுடன் தொடங்கப்பட்டு, கல்லூரி செயலாளர் டாக்டர் எம். வீரப்பன் அவர்களின் வழிகாட்டுதலின் கீழ் நடத்தப்பட்டது. நிகழ்ச்சி, ஆங்கிலத் துறைத் தலைவர் டாக்டர் எஸ். மதுபாலா அவர்களின் வரவேற்புரை மூலம் ஆரம்பமானது. அவர் அனைவரையும் அன்புடன் வரவேற்று, மாணவர்களின் சொற்களஞ்சியம் மற்றும் மொழித் திறனை மேம்படுத்த தெசாரஸ் தினத்தை கொண்டாடுவதின் முக்கியத்துவத்தை விளக்கினார். இதனைத் தொடர்ந்து, கல்லூரி முதல்வர் டாக்டர் கே. கலா அவர்களால் தலைமை உரை வழங்கப்பட்டது. தனது உரையில், மொழிக் கற்றலை வளப்படுத்துவதில் தெசாரஸ் தினத்தின் முக்கியத்துவத்தை அவர் வலியுறுத்தி, சிறந்த தொடர்பாடலுக்காக தெசாரஸ் பயன்படுத்தும் பழக்கத்தை மாணவர்கள் வளர்த்துக்கொள்ள வேண்டும் என ஊக்குவித்தார்., முதன்மை விருந்தினராக கலந்து கொண்ட டாக்டர் ஆர். சந்திரமோகன் அவர்கள், சரியான சொல் பயன்பாடு, தெளிவான வெளிப்பாடு மற்றும் கல்விசார் மேன்மையை ஊக்குவிப்பதில் தெசாரஸ் தினம் வகிக்கும் பங்கை எடுத்துரைக்கும் சிறப்புரை வழங்கினார். அவரது உரை தகவல்களால் நிறைந்ததுடன், மாணவர்களை பெரிதும் ஊக்குவிப்பதாக அமைந்தது., மொத்தம் 120 மாணவர்கள் தெசாரஸ் தின நிகழ்ச்சியில் சுறுசுறுப்பாக பங்கேற்று, நிகழ்ச்சியை உயிர்ப்புடனும் அர்த்தமுள்ளதுமானதாக மாற்றினர். இந்த நிகழ்ச்சி, சொற்களஞ்சிய மேம்பாடு குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தும் தனது நோக்கத்தை சிறப்பாக நிறைவேற்றியது. நிகழ்ச்சி, ஆங்கிலத் துறை உதவி பேராசிரியர் திருமதி எம். முத்துலட்சுமி அவர்களின் நன்றியு ரையுடன் நிறைவடைந்தது. அவர், நிகழ்ச்சியை வெற்றிகரமாகவும் நினைவுகூரத்தக்கதாகவும் மாற்ற உதவிய அனைத்து உயரிய விருந்தினர்கள், ஆசிரியர்கள் மற்றும் மாணவர்களுக்கு தனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்தார்.

## மதுரை மாவட்டம், உசிலம்பட்டி வட்டத்திற்கு உட்பட்ட பகுதிகளில் மேற்கொள்ளப்பட்டு வரும் வளர்ச்சித் திட்டப்பணிகளை மாவட்ட ஆட்சித் தலைவர் கே.ஜே.பிரவீன்குமார் ஆய்வு செய்து பார்வையிட்டார்

மதுரை, ஜன.22-

மதுரை மாவட்டம், உசிலம்பட்டி வட்டத்திற்கு உட்பட்ட பகுதிகளில் மேற்கொள்ளப்பட்டு வரும் வளர்ச்சித் திட்டப்பணிகளை மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.கே.ஜே. பிரவீன்குமார்,இ.ஆ.ப., அவர்கள் இன்று (21.01.2026) ஆய்வு செய்து பார்வையிட்டார்.

மதுரை மாவட்டம், உசிலம்பட்டி வட்டம், பழங்குடியினர் வசிக்கும் குறிஞ்சி நகரில் தமிழ்நாடு அரசு செயல்படுத்தி வரும் பல்வேறு திட்டங்கள் பழங்குடியினருக்கு எந்த அளவு சென்றடைந்துள்ளன என்பதை மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார். அப்போது, மாதந்தோறும் வழங்கப்பட்டு வரும் கலைஞர் மகளிர் உரிமைத் தொகை திட்டத்தின் கீழ் உரிய பயனாளர்களுக்கு தொகை சரிவர கிடைக்கிறதா என்பதை பழங்குடியினரிடம் கேட்டறிந்தார். பின்னர் பொருளாதார மேம்பாட்டிற்காக மகளிர் சுய உதவிக் குழுக்கள் அமைத்து கடன் பெற்று தொழில் மேற்கொண்டு வளர்ச்சி பயிற்சி பெறவும் அறிவுரை வழங்கினார்.

மேலும், இருப்பிடச் சான்றிதழ், சாதிச் சான்றிதழ், ஆதார் அட்டை, குடும்ப அட்டை உள்ளிட்ட அடிப்படை ஆவணங்கள் அனைத்து வீடுகளிலும் உள்ளனவா என்பதையும் அவர் விசாரித்தார். இதனைத் தொடர்ந்து, பழங்குடியினர் பயன்பெறும் வகையில் வரும் சனிக்கிழமை உசிலம்பட்டி வட்டம், குறிஞ்சி நகரில் சார் ஆட்சியர் அவர்கள் தலைமையில் பழங்குடியினருக்கான சிறப்பு முகாம் நடத்த ஏற்பாடு செய்து கோரிக்கை மனுக்களை பெற்று உடனடியாக நடவடிக்கை எடுக்க சம்பந்தப்பட்ட அலுவலர்களுக்கு மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் அறிவுறுத்தினார்.

மதுரை மாவட்டம், உசிலம்பட்டி வட்டம், குறிஞ்சி நகரில், வனத்துறை சார்பில் பழங்குடியினர் குடும்பங்களுக்கு கட்டப்பட்டு வரும் வீடுகள் கட்டுமானப் பணிகளை ஆய்வு செய்து பார்வையிட்டார். தமிழ்நாடு அரசு செயல்படுத்தி வரும் திட்டங்கள் குறித்து பொதுமக்களின் கருத்தினை அறியவும், மக்களின் எதிர்கால கனவுகள் மற்றும் தேவைகளைக் கண்டறியவும், அவர்களது வசிப்பிடங்களுக்கே சென்று நேரடியாக அறிந்து கொள்ளும் "உங்க கனவ சொல்லுங்க" என்ற புதிய திட்டத்தின் கீழ் தன்னார்வலர்களால் மேற்கொள்ளப்பட்டு வரும் கணக்கெடுக்கும் பணியினை பார்வையிட்டார்.

பின்னர் உசிலம்பட்டி வட்டம், குறிஞ்சி நகரில் செயல்பட்டு வரும் அங்கன்வாடி மையத்தில் பயிலும் குழந்தைகளின் எண்ணிக்கை, வழங்கப்படும் ஊட்டச்சத்து உணவுகள், குழந்தைகளின் வயதுக்கேற்ற உயரம் மற்றும் எடை உள்ளிட்டவை குறித்து கேட்டறிந்து ஆய்வு செய்தார்.

அதனைத்தொடர்ந்து உசிலம்பட்டி நகராட்சி பேருந்து நிலையம் புனரமைக்கப்பட்டு வரும் பணியினை பார்வையிட்டு ஆய்வு செய்ததுடன், பேருந்து நிலைய வளாகத்தில் பேருந்துகள் நிறுத்துமிடம், நுழைவு வளைவு, மேற்கூரை, கடைகள், அலுவலக அறை, பணியாளர் ஓய்வறை, தாய்மார்கள் பாலூட்டும் அறை, ஆண்கள் மற்றும் பெண்கள் கழிப்பறைகள், கண்காணிப்பு கேமராக்கள் என பல்வேறு வசதிகளுடன் அமைக்கப்படுகின்றன.

மேலும் உசிலம்பட்டி நகராட்சிக்குட்பட்ட நாடார் சரஸ்வதி மேல்நிலைப் பள்ளியில் பயிலும் +2 மாணவர்களின் கணிதம் பாடம் கற்றல், கற்பித்தல் செயல்பாடுகள், வாசித்தல், எழுதுதல் மற்றும் அடிப்படை எண்ணறிவு திறன்கள் குறித்து ஆய்வு செய்தார்.

பின்னர் உசிலம்பட்டி மருத்துவமனையில் உள்ள காய்ச்சல் வார்டு, பதிவு செய்யும் இடம், உள் மற்றும் வெளி நோயாளிகள் பிரிவு, உள்ளிட்ட இடங்களை பார்வையிட்டு பொதுமக்களுக்கு வழங்கப்படும் சிகிச்சை குறித்து மருத்துவர்களிடம் கேட்டறிந்தார். உசிலம்பட்டி நகராட்சிக்கு உட்பட்ட நுண் உரக்கிடங்கில் திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் கழிவுகளைச் சேகரித்து தரம் பிரித்து மறுசுழற்சி செய்யும் பணியினை பார்வையிட்டார்.

உசிலம்பட்டி வட்டத்திற்கு உட்பட்ட பகுதியில் உள்ள வத்தலக்குண்டு பெரியார் நெடுஞ்சாலையில் மேற்கொள்ளப்பட்டு வரும் அகலப்படுத்தும் பணி மற்றும் மேம்படுத்தும் பணிகளை ஆய்வு செய்து பார்வையிட்டார். உசிலம்பட்டி ஊராட்சி ஒன்றியம், சீமானூத்து ஊராட்சியில் ரூபாய் 3 கோடி மதிப்பீட்டில் முதலமைச்சர் சிறு விளையாட்டு அரங்கம் அமைக்கப்பட்டு வரும் பணிகளை ஆய்வு செய்தார்.

இந்த ஆய்வில் உசிலம்பட்டி சார் ஆட்சியர் திரு.உட்கர்ஷ்குமார் அவர்கள் நகராட்சி, வருவாய்த்துறை, நெடுஞ்சாலைத்துறை அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள் உட்பட அரசு அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.




## புதிய நிர்வாகிகள் தேர்வு

சிவகங்கை, ஜன22-

சிவகங்கை மாவட்டம் மானாமதுரை ரயில்வே சந்திப்பு நிலைய ஆட்டோ உரிமையாளர் நலச்சங்கத்தின் 2026 ஆம் ஆண்டுக்கான புதிய நிர்வாகிகள் தேர்வு நேற்று (ஜன21 )நடைபெற்றது. இதில் தலைவராக சங்கர், செயலாளராக ஆனந்த், பொருளாளராக முருகேசன் (முருகன்) தேர்ந்தெடுக்கப்பட்டனர். புதிய நிர்வாகிகளுக்கு உறுப்பினர்கள் வாழ்த்து தெரிவித்தனர்.

## தேவகோட்டைஸ்ரீ ஆண்டவர் சிபிஎஸ்இ இண்டர் நேஷனல் பள்ளியில் முப்பெரும் விழா

தேவகோட்டை, ஜன.22-

சிவகங்கை மாவட்டம் தேவகோட்டை ஸ்ரீ ஆண்டவர் சிபிஎஸ்இ இண்டர் நேஷனல் பள்ளியில் முப்பெரும் விழாவில் நகர் மன்றத் தலைவர் சுந்தரலிங்கம் தலைமையேற்று சிறப்புரையாற்றினார் தேவகோட்டை யில் சிறந்து விளங்குகின்ற உடற்கல்வி இயக்குனர்கள் .

ஆசிரியர்கள் . செயின்ட் பால் கல்வியியல் கல்லூரி விரிவுரையாளர்கள் .சிறந்த விளையாட்டு வீரர்கள் .சிறந்த மாணவர்கள் ஆகியோரைப் பாராட்டி வாழ்த்தி பரிசுகளை மருத்துவர் ஜெயக்குமார் வழங்கினார். இந்த நிகழ்வில் நகர்மன்ற துணைத் தலைவர் .எஸ் ரமேஷ் .நகர்மன்ற உறுப்பினர் ஐயப்பன் தொழிலதிபர் . வல்லாள மோகன். தேவகோட்டை




காஸ் மாஸ் லயன்ஸ் சங்க தலைவர் மலை ராஜன் செயலாளர். நித்தில். பொருளாளர். உருவாட்டி மணி .தந்தி அலுவலர் பணி ஓய்வு முத்துராமலிங்கம் சீதா ரைஸ்மில் உரிமையாளர் பிரகாஷ் வழக்குரைஞர் சொர்ண பிரகாஷ் .பள்ளி முதல்வர் .திருமதி சுமித்ரா. ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பித்தனர் . இந்த நிகழ்ச்சி ஏற்பாட்டினை கவிஞர். கி.ஏகோஜிராவ் ஏற்பாடு செய்திருந்தார்.





## தேவகோட்டை ஆனந்தா கல்லூரியில் அரசியல் சாசன விழிப்புணர்வு கருத்தரங்கம்

தேவகோட்டை, ஜன.22-

சிவகங்கை மாவட்டம் தேவகோட்டை தமிழ்நாடு முற்போக்கு எழுத்தாளர் கலைஞர்கள் சங்கம் மற்றும் ஆனந்தா கல்லூரி இணைந்து நடத்திய அரசியல் சாசன விழிப்பு ணர்வு கருத்தரங்கம்

முதல்வர் அருட்திரு ஜார்ஜ் பெர்னாண்டஸ் தலைமை வகித்தார்கள் நிகழ்வில் மாணவிகளின் சமூக விழிப்புணர்வு கும்மி நடனம் நடைபெற்றது

தமிழ்நாடு முற்போக்கு எழுத்தாளர் கலைஞர்கள் சங்க தேவகோட்டை கிளை செயலாளர் ஜீவானந்தம் வரவேற்புரை வழங்கினார்

கிளைத் தலைவர் போஸ் மற்றும் கிளை பொருளாளர்



பேராசிரியர் பானுலதா ஆகியோர் முன்னிலை வகித்தனர்மாவட்டச் செயலாளர் முனைவர் அன்பரசன் வாழ்த்துரை வழங்கினார்அரசியல் சாசன விழிப்புணர்வு கவிதைப் போட்டியில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கு பரிசுகள் வழங்கப்பட்டன.

அரசியலமைப்புச் சட்டம் எனும் வாழ்வியல்என்ற தலைப்பில் கல்வியாளர் பிரின்ஸ் கஜேந்திர பாபு கருத்துரை வழங்கினார்

நிறைவாக ஆனந்தா கல்லூரி உதவிப் பேராசிரியர் தர்மராஜ் நன்றியுரை ஆற்றினார்.



■ கிருஷ்ணகிரி புதிய பேருந்து நிலையம், அண்ணாசிலை அருகில், தேசிய சாலை பாதுகாப்பு மாதம் 2026 முன்னிட்டு, நெடுஞ்சாலைத்துறை சார்பாக, சாலைப்பாதுகாப்பு குறித்த விழிப்புணர்வு பேரணியை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.ச.தினேஷ் குமார் கொடியசைத்து துவக்கி வைத்து, தலைகவசம் அணிந்து வராத இருசக்கர வாகன ஓட்டிகளுக்கு புதிய தலைகவசங்களை வழங்கி, இனிவரும் காலங்களில் தலைக்கவசம் அணிந்து வாகனங்களை ஓட்ட வேண்டும் என அறிவுரை வழங்கினார். உடன், நெடுஞ்சாலைத்துறை கோட்டப்பொறியாளர் (கட்டுமானம் மற்றும் பராமரிப்பு) திரு.திருலோகசுந்தர், துணை காவல் கண்காணிப்பாளர் ராமச்சந்திரன்,உதவி கோட்ட பொறியாளர்கள் அன்பு எழில், முருகன், உதவி பொறியாளர் அன்பரசு உள்ளிட்ட பலர் உள்ளனர்.




## கீழக்கோட்டையில் தமிழரின் சமத்துவ பொங்கல் விழா கொண்டாட்டம்

காளையார் கோவில், ஜன.22-

சிவகங்கை மாவட்டம் காளையார்கோவில் ஒன்றியத்தில் உள்ள கீழக் கோட்டை ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளியில் மகிழ் முற்றம் திட்டத்திலுள்ள அணிகளுக்கிடையே பொங்கல் விழா சிறப்பாக கொண்டாடப்பட்டது. தலைமையாசிரியை தெய்வானை தலைமை வகித்து பொங்கல் தின சிறப்புரையாற்றினார். தமிழ்நாடு அறிவியல் இயக்கத் தலைவர் அறிவியல் பட்டதாரி ஆசிரியர் ஆரோக்கியசாமி வரவேற்புரையாற்றினார். மகிழ் முற்றம் மாணவர் குழுக்கள் மூலம் பிரிக்கப்பட்டுள்ள குறிஞ்சி முல்லை மருதம் நெய்தல் பாலை அணியினர்கள் தனித்தனியாகவும் பள்ளி மேலாண்மை குழு சார்பாக பள்ளியளவிலும் பொங்கல்



வைக்கப்பட்டது. பாலை அணியினரின் பொங்கல் பானை முதலில் பொங்கி முதல் பரிசை வென்றது. மருதம் அணியினர் சுவை மிகுந்த பொங்கலைச் செய்து முதல் பரிசை பெற்றனர். பாலை அணியினர் அழகான கோலத்தை இட்டு முதல் பரிசை பெற்றனர். ஆண்களுக்கான அதிர்ஷ்டம் யாருக்கு போட்டியில் நெய்தல் அணி ரித்தீஷ் அணியினர் முதல் இடத்தையும் பாலை அணியைச் சார்ந்த கிரித்திஷ் ஸ்ரீதர் இரண்டு மற்றும் மூன்றாம் இடத்தையும் பெற்றனர். பெண்களுக்கான அதிர்ஷ்டம் யாருக்கு போட்டியில் முல்லை அணி ஜோதிகா முதல் இடத்தையும் மருதம் அணி கவிதா இரண்டாம் இடத்தையும் முல்லை அணி கிருத்திகா மூன்றாம் இடத்தையும் பெற்றனர். ஆசிரியர் மற்றும் பெற்றோருக்கு நடத்தப்பட்ட அதிர்ஷ்டம் யாருக்கு போட்டியில் புஷ்பம் முதல் இடத்தையும் கமலம்பாய் ஆசிரியை இரண்டாம் இடத்தையும் மீனாட்சி ஆசிரியை மூன்றாம் இடத்தையும் பெற்றனர். வெற்றி பெற்ற அனைவருக்கும் பரிசுகள் வழங்கப்பட்டன. திருக்குறள் ஒப்புவித்த அனைத்து மாணவர் களுக்கும் திருக்குறள் புத்தகம் வழங்கப்பட்டன. பொங்கலையொட்டி மாணவர்களுக்கு கபாடி போட்டி நடத்தப்பட்டு பரிசுகள் வழங்கப்பட்டன. சிறப்பு விருந்தினராக கலந்துகொண்ட கராத்தே மாஸ்டர் ராதாவிற்கு நினைவுப் பரிசு வழங்கப்பட்டது. ஒட்டு மொத்த பரிசை பாலை அணியினர் பெற்றனர். ஆங்கிலப் பட்டதாரி ஆசிரியை கீதா நன்றி கூறினார். ஆசிரியர்கள் வாசுகி கமலம்பாய் கணினி பயிற்றுநர் வித்யா சத்துணவு உதவியாளர் அஞ்சலை கஸ்தூரி காலை உணவு சமையலர் பஞ்சவர்ணம் பெற்றோர் ஆசிரியர் கழக தலைவி சத்யா பெற்றோர்கள் புஷ்பம் முத்துலெட்சுமி நித்யா கலந்து கொண்டு சிறப்பித்தார்கள்.



■ சிவகங்கை நகர் மற்றும் சிவகங்கை மாவட்டம் சுற்றுவட்டாரங்களில் கனரக வாகனங்கள், ஆட்டோக்களில் பொருத்தப்பட்டுள்ள அதிக சத்தம் எழுப்பும் ஏர் ஹாரன்களால் பொதுமக்கள் அவதி அடைகின்றனர். குழந்தைகள், முதியவர்கள் பாதிப்பு; இருசக்கர ஓட்டிகளுக்கு விபத்து அபாயம் அதிகரிப்பு என புகார். விதிமீறும் ஏர் ஹாரன்களை அகற்றி, கடும் நடவடிக்கை எடுக்க போக்குவரத்து காவல் துறையினரிடம் பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.



■ சிவகங்கை மாவட்டம் மானாமதுரை நகராட்சி வார்டு எண்.5 ல், சிவகங்கை ரஸ்தா பகுதியில் திருமண மகால் அருகே காய்ந்து விழும் நிலையில் உள்ள பெரிய மரம் விபத்து அபாயத்தை ஏற்படுத்தி வருகிறது. துப்புரவு ஆய்வாளர் அறிக்கையின் அடிப்படையில், அந்த மரத்தை உடனடியாக அகற்றுமாறு நெடுஞ்சாலைத் துறை உதவி கோட்டப் பொறியாளருக்கு நகராட்சி ஆணையாளர் கடிதம் அனுப்பியுள்ளார். பொதுமக்கள் பாதுகாப்பை கருத்தில் கொண்டு விரைந்து நடவடிக்கை எடுக்கப்படுமா?




■ திருப்பதி ஏழுமலையான் கோவிலில் சுந்தர் சி பிறந்தநாள் முன்னிட்டு சாமி தரிசனம் செய்த அவரது மனைவி குஷ்பு தரிசனம் செய்தார்..

## திருப்பூர் மாவட்ட ஆட்சியாளர் தகவல் குடியரசு தினமான அன்று கிராம சபைக் கூட்டம் பொது இடங்களில் நடைபெறும்

திருப்பூர், ஜன.22-

திருப்பூர் மாவட்டம் உதவி இயக்குநர்(ஊராட்சிகள் மற்றும் தணிக்கை) திருப்பூர் வடக்குக்குட்பட்ட 125 கிராம ஊராட்சிகளிலும், குடியரசு தினமான 26.01.2026 அன்று காலை 11.00 மணியளவில் கிராம சபைக் கூட்டம் அந்தந்த கிராம ஊராட்சிகளின் பொது இடங்களில் நடைபெறும்.

கிராம சபைக் கூட்டத்தில் கீழ்கண்ட பொருட்கள் குறித்து விவாதிக்கப்படும்.

கிராம ஊராட்சி நிர்வாகம் மற்றும் பொது நிதி செலவினம் குறித்து விவாதித்தல்.

கிராம ஊராட்சியின் தணிக்கை அறிக்கை

கொசுக்கள் மூலம் பரவும் டெங்கு காய்ச்சல் தடுப்பு நடவடிக்கைகள் குறித்து விவாதித்தல்

மக்கள் திட்டமிடல் இயக்கம் (people's plan campaign) மூலம் 2026- 2027 ஆம் நிதியாண்டிற்கான கிராம வளர்ச்சித் திட்டத்திற்கு ஒப்புதல் பெறுதல்.

தொழிலாளர் வரவு செலவு திட்டம்

தொழிலாளர் வரவு செலவு திட்ட பணிகள்

நலிவு நிலை குறைப்பு நிதி

தூய்மை பாரத இயக்க (ஊரகம்)திட்டம்

ஜல் ஜீவன் திட்டம்

சிறு பாசன ஏரிகள் புதுப்பித்தல் குறித்த விவரம்

தொகுதி மேம்பாட்டுத்திட்டம்

இதர பொருட்கள்.

திருப்பூர் மாவட்டம் உதவி இயக்குநர் (ஊராட்சிகள் மற்றும் தணிக்கை) திருப்பூர் வடக்குக்குட்பட்ட 125 கிராம ஊராட்சிகளிலும் மேற்படி கூட்டப்பொருட்கள் குறித்து, 26.01.2026 அன்று காலை 11.00 மணியளவில் நடைபெறும் கிராம சபைக் கூட்டத்தில் விவாதிக்கப்படவுள்ளது.

கிராம சபைக் கூட்டத்தை திறம்பட நடத்திட ஏதுவாக ஒவ்வொரு ஊராட்சிக்கும், ஊராட்சி ஒன்றிய அலுவலகத்திலிருந்து பற்றாளர்கள் நியமிக்கப்பட்டுள்ளார்கள். எனவே, கிராம பொது மக்கள் மேற்படி கிராம சபைக் கூட்டத்தில் கலந்து கொண்டு மேற்காணும் பொருள்கள் மற்றும் அந்தந்த கிராம ஊராட்சிகளின் வளர்ச்சிக்காக தெரிவிக்க விரும்பும் நல்ல ஆலோசனைகள் குறித்தும் விவாதித்திட கேட்டுக் கொள்ளப்படுகிறது. இவ்வாறு மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர். மனிஷ் நாரணவரே இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்கள்.



■ வடசென்னை வளர்ச்சித் திட்டத்தின் கீழ் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம் சார்பில் சென்னை, ஏழுகிணறு, அரசு ஸ்டான்லி மருத்துவமனை அருகில், 147 கோடி ரூபாய் செலவில் நவீன உட்கட்டமைப்பு வசதிகளுடன் கட்டப்பட்டுள்ள 776 அடுக்குமாடி குடியிருப்புகளைக் கொண்ட "முதல்வர் நகர்ப்புற குடியிருப்புகள்" தமிழ்நாடு முதலமைச்சர் @mkstalin திறந்து வைத்து, ஒதுக்கீட்டு ஆணைகளை பயனாளிகளுக்கு வழங்கினார்.



■ செங்கல்பட்டு மாவட்டம் பல்லாவரம் அடுத்த கீழ்கட்டளையில் எம்ஜிஆரின் 109வது பிறந்த நாளை முன்னிட்டு செங்கல்பட்டு மேற்கு மாவட்டம் கீழ்கட்டளை பகுதி கழக சார்பில் பகுதி செயலாளர் ஞா.சந்திரசேகர் ராஜா ஏற்பாட்டில் ஆறு இடங்களில் எம்ஜிஆர் திருவுருவப்படத்திற்கு மலர் துவி மரியாதை செய்து கழக கொடி ஏற்றி வைத்து பொதுமக்களுக்கு அன்னதானம் வழங்கும் நிகழ்ச்சி மாவட்ட துணைச் செயலாளர் ப.தன்சிங் துவங்கி வைத்தார் இந்த நிகழ்ச்சியில் பல்லாவரம் பகுதி கழகச் செயலாளர் த.ஜெயபிரகாஷ், முன்னாள் நகர மன்ற உறுப்பினர் கே.வி.விசுவநாதன், எம்.ஞானசேகரன், வி.மனோகரன், அவைத்தலைவர் என்.பிச்சாண்டி, பகுதி துணைச் செயலாளர்கள் அம்மாணி, சரத் லோகநாதன், மாவட்ட பிரதிநிதிகள் ஆர்.ரங்கராஜன், எஸ்.ஆர்.பார்த்தசாரதி, பொருளாளர் எம்.ராஜசேகர், வட்டச் செயலாளர்கள் என்.ராமநாதன், க.தீனன், எஸ்.வெங்கடேசன், ஏகே.சிவமூர்த்தி உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்

Printed by A.PONRAJ, published ,owned by A.PONRAJ and printed at "SRI SAAI PRINTERS"No.122,Neethipathi, Rajasekaran Street,vaarasanthai road,Sivaganga and published at 6 a, madurai road Sivaganga, Sivaganga district,Editor A.PONRAJ. Ph: 8508502161